1972 மார்ச் 22]

நீராக ஓடிக் கொண்டிருப்பதாகச் சொல்கிருர்கள். அது சம்மந்தமாக இனியாவது ஒரு நிபுணர் குழு ஏற்படுத்தி, இதை ஆராய்ச்சி செய்து, அந்த நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே சொன்னேன் பாலாற்றின் கீழ் அதன் சக்திக்கு மீறிய பாசன வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற நிலைமை இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது நிலநீர் ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்த பிறகு அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையின் அடிப்படையில் நிலநீரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிற காரணத்திஞல், இதுபோன்ற தடைகள் விதிக்கப்பட ஏதுவாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருக்கிற காரணத்திஞல், மேற்கொண்டு குழு நியமிப்பதற்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

Agricultural Production Plans.

* 307 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Ministry of Agriculture has proposed to review the agricultural production plan of Tamil Nadu Government for 1970–71; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :(அ) ஆம்.

(இ) உணவு–வேளாண்மை சமுதாய வளர்ச்சி–கூட்டுறவு மத்திய அமைச்சகத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இம் மாநிலத்திற்கு வருகை தந்து 1970–71-ஆம் ஆண்டு வேளாண்மை உற்பத்தித் திட்டம் குறித்து மாநில அரசு அதிகாரிகளுடன் 1970 ஜுன் 10, 11, 12-ஆம் நாட்களில் விவாதம் நடத்தியது.

Training Course for Gardeners.

* 308 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any training course for gardeners has been given by the Agricultural Department in this State during 1971; and

(*b*) if so, the details thereof?